# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

ஒளி - 02 - கதிர் - 68 | 26.06.2001 | செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-



உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821


# புலிகளின் "கிளைமோர்" தாக்குதலில் 6 படையினர் பலி; 20 பேர் காயம்!

(யாழ் நிருபர்)

**யாழ் மட்டுவில் பகுதியில் படையினர் விடுமுறையில் சென்று கொண்டிருந்த வாகனமொன்று நேற்று பிற்பகல் நிலக் கண்ணிவெடியில் சிக்கி ஆறு படையினர் பலியாகியுள்ளனர். இருபது பேர் காயமடைந்துள்ளனர்.**

யாழ் நகரில் இருந்து 14 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மட்டுவில் வடக்கே படையினர் விடுமுறையில் சென்று கொண்டிருந்த வாகனமொன்று விடுதலைப்புலிகளின் கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கியது.

இச்சம்பவத்தில் ஆறு படையினர் பலியாகியுள்ளனர். இருபது படையினர் காயமடைந்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டுவில் வடக்குப் பகுதியில் இரவு வேளைகளில் ஊடுருவும் விடுதலைப்புலிகள் கண்ணிவெடிகளைப் பொருத்தி விட்டுச் சென்று விடுவதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நீண்ட இடை வெளிக்குப் பின் தென்மராட்சிப் பகுதியில் கண்ணிவெடிச் சம்பவம் இடம் பெற்றதைத் தொடர்ந்து பாதுகாப்பு வட்டாரங்கள் உசாரடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த படையினர் பலாலி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிலர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப் பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சித்திரவதைகளை எதிர்ப்போம்!

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச தினம் இன்றாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் 1970ஆம் ஆண்டு முதல் அவசரகாலச்சட்டத்தின் கீழும் 1979முதல் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கைது செய்யப்பட்டு, ஈவிரக்கமற்ற சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எவ்வகையான சித்திரவதைக்கும் நாம் உட்படுத்தப்பட முடியாது என்பது எமது அடிப்படை மனித உரிமையாகும்.

இந்த உரிமையை இலங்கையின் அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளுகின்றது. இது தவிரவும் சித்திரவதைக்கு எதிரான பொதுநலவாய சர்வதேச ஒப்பந்தத்திலும் இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் படி ஒருவருக்கு ஒரு அடி அடிப்பது கூட சித்திரவதையாகவே கருதப்படுகின்றது. ஒரு மனிதனை உளவியல் ரீதியாக துன்புறுத்துவது கூடச் சித்திரவதையே. பாலியல் வல்லுறவு ஓர் கொடூரமான மனித வதை.

(8ம் பக்கம் பார்க்க)

## இயந்திரப்படகுகள் மூலம் கடலட்டை அபகரிப்பு உள்ளூர் மீனவர்கள் அவதி!

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு கடற்பரப்பில் 20 இயந்திரப்படகில் இரவு பகலாக கடலட்டை, கலா மீன்கள் பிடிப்பதில் சிலர் ஈடுபடுவதால் சுமார் 1000 குடும்பங்கள் வருமானமின்றி அவதியுறுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2ம் மாதம் முதல் கல்லடி, நாவலடி, முகத்துவாரம், காத்தான்குடி, பூநொச்சிமுனை, நொச்சிமுனை போன்ற பிரதேசங்களில் கடலட்டைகள் கலா மீன்கள் பிடிப்பதில் சிலர் ஈடுபடுவதால் மீன்பிடியை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்ட நானூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## தளுவத்த திரும்புகிறார்

(நமது நிருபர்)

அமெரிக்காவுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்த கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் றொஹான் தளுவத்த நாடு திரும்பவிருக்கின்றார்.

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகளை குறிவைத்து புதைத்திருந்த கண்ணிவெடி செயலிழப்பு!

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான்நதாறு மூலைக்கு வடக்கே 12 கி.மீ தொலைவிலுள்ள மைலவெட்டுவான் இலுக்கு பிரதான பாதையில் ஞாயிற்றுக்கிழமை மறைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க கண்ணிவெடி ஒன்று விடுதலைப் புலிகளால் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

அமுக்க கண்ணிவெடி மறைத்து வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதும் ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடி மீட்பு பிரிவு அதனை செயலிழக்கச் செய்தது.

இராணுவத்தினர் விஷேட உளவாளிகளைப்பயன்படுத்தி இந்த கண்ணிவெடியைப் பொருத்தியிருக்க வேண்டும் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதிப் பொது மக்களுக்கு விடுதலைப்புலிகள் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளனர். "அன்பார்ந்த மககளே எமது கட்டுப்பாட்டுப்பகுதியில் இராணுவத்தினர் கொடுக்கும் அற்ப சலுகைகளுக்காக இராணுவ உளவாளிகள் இவ்வாறான வெடி பொருட்களை புதைத்துச் செல்லுகின்றனர். எனவே எமது பகுதியில் சந்தேகத்துக்கிடமானவர்கள், அல்லது புதியவர்கள் நடமாடினால் அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயங்களில் அறிவிக்குமாறு பணிவாகக் கேட்கின்றோம்." எனத் தெரிவித்துள்ளனர்.

## பேரியலின் தீர்மானத்தை கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுகோள்

(ஓட்டமாவடி நிருபர்)

இஸ்லாமிய சரிஆ அடிப்படையில் பெண் தலைமைத்துவத்தை எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை எதிர்த்து போர்க்கொடியைத் தூக்குவதோடு எமது தலைவர் ரவூப் ஹக்கீமின் கரத்தை பலப்படுத்து வதற்காக நாளை புதன்கிழமை கல்குடாத் தொகுதியில் "ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று கல்குடாத் தொகுதி முஸ்லிம்களால் எடுக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)




## ஜானகபுரவில் சிப்பாய் பலி

(நமது நிருபர்)

வெலிஓயாவுக்குத் தென்மேற்கே ஜானகபுரவில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது சனிக்கிழமை காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர்

(8ம் பக்கம் பார்க்க)


## CD விற்பனைக்கு

புதிய பழைய தரமான தமிழ், ஹிந்தி, ஆங்கில ,பக்திப் பாடல்கள் அடங்கிய வீடியோ, ஓடியோ சீடிகளும்,தரமான வீடியோ படப்பிடிப்புக்களுக்கும், வீடியோ கொப்பிகளை சீடிக்கு மாற்றிக் கொடுக்கவும், தரமான வீடியோ பிரதிகளை வாடகைக்குப் பெறவும், ஓடியோ நாடாக்களை பதிவு செய்து கொள்ளவும்,இவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

NEW VIDEOS PATHY

புதிய வெளியீடுகள்

வித்தியாசகரின் இசையில்,

'தில்'

தேனிசைத் தென்றல் தேவாவின் இசையில்

'கலகலப்பு'

NEW VIDEOS PATHY
267,TRINCO RAOD,
BATTICALOA

T.P.065-26221

ADVT

## உடனடி வேலைவாய்ப்பு

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

நியூபாஹிம் எண்டப்பிரைஸஸ்

LL No -736

283/1 பிரதான வீதி, கொழும்பு.

விசாரணைகளுக்கு:

இல:15/1, 15/2, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090

ADVT.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk


## ஆசையில் தான் அடக்கம்!

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதா, அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பதா? என்பது பற்றிய பிரேரணை மீதான விவாதம் முடிவடைந்து வாக்கெடுப்புக்கு விடப்படவிருக்கும் நேரத்தில் தான் முடிவு செய்யவிருப்பதாக ஜனதா விமுக்தி பெரமுன அறிவித்திருக்கிறது.

பலமணிநேரம் கூடி ஆராய்ந்த பின் இந்த முடிவை அந்தக் கட்சி மேற்கொண்டிருக்கிறது. இந்தக் கட்சிக்கு இப்பொழுது பாராளுமன்றத்தில் பத்து ஆசனங்கள் இருக்கின்றன. இந்தப் பத்து ஆசனங்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியும்.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஒரு சாரார் முயற்சி செய்துவரும் அதேசமயம் ஆட்சி கவிழாமல் காப்பாற்றுவதற்கு மற்றொரு சாரார் பெருமுயற்சி செய்து வருகின்றனர்.

இருதரப்பிலும் பணப்பட்டுவாடா பற்றிய பேரம் பேசப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பலமான பேச்சு அடிபடுகிறது. ஆட்சி கவிழாமல் காப்பாற்றுவதற்கு கோடிக் கணக்கில் பேரம் பேசப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் உறுதியான வதந்தி நிலவுகிறது.

இதேசமயம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை சுலபத்தில் கவிழ்த்து விட முடியாது என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜனநாயகமுறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே பாராளுமன்றத்தில் எதிராக வாக்களிப்பதன்மூலம் வீழ்த்துவதற்கும் ஜனநாயகம் வழிசெய்திருக்கிறது.

1960ம் ஆண்டு மார்ச்மாதம் நடந்த தேர்தலில் மிகக் குறைந்த பெரும்பான்மைப்பலத்துடன் டட்லி சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. தந்தை செல்வா தலைமையிலிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நிபந்தனையுடன் ஆதரவளிக்க முன்வந்ததால் டட்லி பிரதம மந்திரியாகப் பதவியேற்றார்.

நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான அறிகுறி தென்பட்டதால் தந்தை செல்வா டட்லியிடம் உறுதி மொழி கேட்டும் கிடைக்காததைத் தொடர்ந்து அரசின் கொள்கைப் பிரகடனமான சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் வாக்களித்து அரசாங்கத்தைப்பதவி இழக்கச் செய்தனர்.

இந்தத் தேர்தலிலும் இதன் பின் ஜூலை மாதத்தில் நடந்த தேர்தலிலும் இப்போது புலிப்பிரசாரம் போல் அன்று சமஷ்டியினர் நாட்டைப் பிரிக்கப்பார்க்கிறார்கள் என்று துவேசப்பிரசாரம் செய்யப்பட்டது.

1960 ஆம் ஆண்டு ஜூலைத் தேர்தலில் இடதுசாரிகளின் ஆதரவுடன் மிகப்பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிக்கு வந்த சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பத்திரிகைகளைக்கட்டுப்படுத்துவதற்கான மசோதாவொன்றைக் கொண்டு வர முன்வந்தது.

பத்திரிகை மசோதா பற்றிய வெள்ளையறிக்கையை சிறிமா பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். ஆளும் கட்சிக்குள் பெரும் சர்ச்சையைக்கிளப்பிய இந்த வெள்ளை அறிக்கைமீது நடந்த வாக்களிப்பில் ஆளும் கட்சியிலிருந்து வெளியேறிய சி.பி.டி.சில்வா குழுவினர் எதிர்த்து வாக்களிக்க, அல்பிரட் துரையப்பா சபைக்கு வராமலிருக்க ஒரு வாக்கினால் அரசாங்கம் 1964ஆம் ஆண்டின் இறுதியில் தோல்வியடைந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் ஆட்சியிலிருக்கும் அரசை வீழ்த்துவதும் ஜனநாயக விரோதச் செயல் அல்ல என்பது ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தெரியாததுமல்ல.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதும் ஆளும் கட்சியில் அமைச்சராக இருந்த சிலரே இதற்கு முன்வந்து முயற்சி செய்ததும் நாடறிந்த விஷயம். ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இது தெரியும்.

இவையெல்லாம் ஜனநாயகத்தின் திருவிளையாடல். இந்தப்பெரும்பான்மை ஜனநாயகம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் போது ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்களும் அதற்காகக் காத்திருப்பவர்களும் குரல் கொடுத்ததுண்டா?

இதெல்லாம் அவர்களின் ஆதிக்கப் போட்டி. இந்தப் போட்டிகளில் பலிக்கடாவாக ஆக்கப்படுவது தமிழ் மக்கள் தான். இப்பொழுது கூட அரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'டெயிலி நியூஸ்' பத்திரிகை நேற்றைய தனது தலையங்கத்தில், விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஐக்கிய தேசியக்கட்சி உறுதியளித்திருப்பதாக எழுதியிருக்கிறது. நாய்க்கு எங்கே அடித்தாலும் காலைத்தூக்குவது போல இங்கு இப்பொழுது தமிழருக்கெதிரான புலிப்பிரசாரம் தான்.

யார் ஆட்சி பீடத்திலிருப்பது என்பதற்காக அவர்கள் ஆதிக்கப் போட்டியிலீடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நலிந்து கிடக்கும் தமிழ் மக்களைப்பற்றி அவர்களுக்கு என்ன கவலை.

சமாதானம் என்பதெல்லாம் ஆட்சி அதிகாரத்திலுள்ள ஆசையில் தான் அடக்கம்!

# மீண்டும் சூடு பிடிக்கும் ஹர்த்தால் கலாசாரம்


எஸ்.எம்.ஜறான்
மருதமுனை


ஹர்த்தாலுக்கென்று ஒரு தனி வரலாறும், மரியாதையும் உண்டு. பாரதத்தின் தந்தை மகாத்மாகாந்தி அகிம்சை வழியில் இந்தியத்தேசத்துக்கு சுதந்திரமும் விடுதலையையும் வேண்டுவதற்காக அக்காலத்தில் பிரிட்டிஷாரின் ஏதேச்சதிகார, சர்வதிகார ஆட்சிக்கெதிராகவும் அகிம்சை வழியில் போராடியதுடன் பிரிட்டிஷ் காலணித்துவ சர்வதிகார அடக்குமுறைக்கெதிராக அவ்வப்போது இந்திய தேசத்து மக்களை ஒன்று திரட்டி ஓரணியில் நிறுத்தி தமது ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டினார்கள். இது ஹர்த்தால் என அழைக்கலாயிற்று.

காந்தியின் இக் ஹர்த்தால் அனுஷ்டிப்பானது அடக்குமுறைக்கு எதிரானதாக இருக்கும் அதே வேளை அச்சர்வதிகார ஆட்சியில் மக்களைப் பாதிக்கும் விடயங்களில் அம்மக்களை ஒன்று திரட்டி தமது அன்மதியான எதிர்ப்பை இக் ஹர்த்தாலின் மூலம் காட்டுவதே இதன் நோக்கமுமாகும். இச் செயற்பாட்டின் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களது சர்வதிகாரப் போக்கிலிருந்து சற்று தளர்ச்சியடையவும், மக்களின் அமோக எதிர்ப்புக்கு கட்டுப்படவும் வேண்டிய நிலை உருவானது. இதன் மூலம் மகாத்மா காந்தி அவர்களினால் பல சந்தரப்பங்களிலும் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலானது பூரணமானதாகவும் தமது நோக்கத்தை ஓரளவுக்கேனும் திருப்தியாக நிறைவேற்றக் கூடியதாகவும் இருந்ததுடன் இவரது இக்ஹர்த்தாலை பிரிட்டிஷார் மிகவும் ஐயப்பாட்டுடன் நோக்கியதுடன் மக்களின் கோரிக்கைகளை இயன்றளவு நிறைவேற்றிக் கொடுக்கவும் இதன் மூலம் வழிபிறந்தது.

பெரும்பாலும் காந்தியின் ஹர்த்தால் அனுஷ்டிப்பானது தேச விடுதலைக்கானதாகவே அமைந்திருந்தது. காந்தியடிகளார் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைவதையே குறிக்கோளாகக் கொண்டு ''வெள்ளையனே வெளியேறு'' போன்ற கோஷங்களுடன் செயற்பட்டதால் அவரது ஹர்த்தால் நாட்டுப்பற்றுள்ள சகல இன மக்களாலும் மிகவும் விரும்பப்பட்டது, மதிக்கப்பட்டது.

எமது நாட்டிலும் ஹர்த்தால் எனும் பெயரில் அடிக்கடி அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் நோக்கத்தையும் அதன் பிரதிபலிப்பையும் அவதானிக்கும் போது விளைவுகள் மிகவும் மன வேதனையைக் கொடுப்பதாகவே அமைகின்றது. ஹர்த்தால் என்ன நல்ல நோக்கத்திற்காக அறிமுகப் படுத்தப்பட்டதோ, அனுஷ்டிக்கப் பட்டதோ அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக எமது தேச ஹர்த்தால் கலாசாரம் காணப்படுவதைப் பார்க்கும் போது இதைக் கண்டிக்காமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

நமது நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கில் 1990 கால கட்டத்தை எடுத்துப்பார்ப்போமாயின் இக் ஹர்த்தாலின் அகோரம் எல்லோருக்கும் நினைவிருக்கும், புரிந்திருக்கும். அக்காலப்பகுதிகளில் வீதியில் ஒரு சுவரொட்டி ஒட்டியிருந்தால் போதும் மறுகணம் நகரெல்லாம் ஒரே பதட்டம், வர்த்தக நிலையங்கள் திறக்கப்படமாட்டாது. அலுவலகங்களுக்கு அச்சுறுத்தல்களும் அனாமதேய தொலைபேசிகளும் வரும். சன நடமாட்டம் ஸ்தம்பித்து விடும். மீறி வர்த்தக நிலையங்களை திறப்போருக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வதந்திகள் பரவும். இதே போன்று வாகனங்களைச் செலுத்தினால் இடை நடுவே கல்லெறியாம், தீ வைப்பாம் எனவும் பயங்காட்டுவர். ஆக சில நேரம் மறுநாள் அல்லது அதற்கு அடுத்தநாள் (மூன்றாவது நாள்) என நீடிப்பதுமுண்டு. இவை எல்லாவற்றிற்கு மேலாக அச்சுவரொட்டியில் எழுதப்பட்டிருப்பதானது ஒரு சாதாரண விடயமாகக் கூட இருக்கும் அல்லது அரசாங்கத்திற்கு அல்லது படையினர் சம்பந்தப்பட்டதாக அதனையும் விட சிறுபான்மையினருக்கிடைப்பட்ட சிறு பிரச்சினையாகக் கூட அது இருக்கலாம்.

எது எப்படியோ ஒரு சிறு உள்நாட்டு பிரச்சினை காரணமாக அல்லது இன முரண்பாடு காரணமாக அதில் பாதிக்கப்பட்ட பகுதியினரால் மேற்கொள்ளப்படும் இக் ஹர்த்தால் செயற்பாடானது இன்று வரை அவர்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றதா? எதிர்பார்த்த நன்மையைத்தான் அளித்துள்ளதா? என்று பார்த்தால் விடை அதில் கிடைத்த நன்மையை விட தீமைகளே அதிகம் என்பதோடு பொருளாதார, உயர் நஷ்டங்களே அதிகம் என திட்டவட்டமாகக் கூறலாம். இக் ஹர்த்தாலினால் பாரிய சமூக ரீதியான மாற்றங்களோ, திருத்தங்களோ இன்று வரை ஏற்படவில்லை. அரசாங்கமோ இதனை பெரிதாக அலட்டிக் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்ததாகவோ கூறுவதற்கில்லை. அவ்வாறு அக்கறை கொண்டு செயற்பட்டிருப்பின் இக் ஹர்த்தால் கலாசாரமும் மீண்டும் மீண்டும் தொடர்ந்திருக்காது. வெறுமனே உயிர்ச்சேதங்களும், பொருட் சேதங்களுமே மிச்சம்.

இத் 90ம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த ஹர்த்தால் செயற்பாடானது எதுவித நியாயமான காரணங்களின்றி அனுஷ்டிக்கப் பட்டதுடன் அந்நாட்களில் மாதத்தில் வழமையாக நாட்களை விட ஹர்த்தால் தின்ங்களாக அனுஷ்டிக்கப்பட்ட நாட்களே அதிகம் எனும் அளவிற்கு இது உக்கிரமடைந்திருந்தது. ஒரு சிறு சம்பவம் என்றாலே போதும் உடனே இரு சமூகங்களான தமிழ், முஸ்லிம்களிடையே அல்லது படையினருடனோ அல்லது அரசாங்கத்துடனோ குழம்பும் சூழ்நிலையும், சகல நிறுவனங்களையும் இழுத்து மூடும் நிலவரமும் காணப்பட்டது.

1990 காலப்பகுதிக்குப் பின் இக் ஹர்த்தால் கலாசாரம் ஓரளவுக்கு குறைந்து படிப்படியாக அறவே இல்லை எனும் அளவிற்கு கடந்த சில ஆண்டுகள் தென்பட்டன. மக்களும் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுடன் தம் கடமைகளை செய்து கொண்டு வருகையில் ''அண்மைக்காலமாக மீண்டும் இக் ஹர்த்தால் நோய் சூடு பிடிக்கும் நிலை தோன்றி வருகின்றது.'' கடந்த சில மாதங்களாக கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி இடம் பெறும் ஹர்த்தால் அனுஷ்டிப்பானது ஓரளவு நிம்மதியாக வாழ்ந்த மக்களிடையே மனக்கசப்பையும் பல அசௌகரியங்களையும் தோற்று வித்து வருகின்றது.

ஹர்த்தால் எந்த நல்ல நோக்கத்திற்காக அனுஷ்டிக் கப்பட்டதோ அக்குறிக்கோளை

இப்படி அடிக்கடி இடம்பெறும் ஹர்த்தால் செயற்பாடானது தவிடு பொடியாக்கி விடும் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அதற்காக ஹர்த்தால் அனுஷ்டிப்பு கூடாது என திட்டவட்டமாக கூறவில்லை. ஆனால் அதன் நோக்கம் உண்மையானதாகவும் அதற்கு மக்களிடையே அமோக ஆதரவும் இருக்க வேண்டும். அப்போது தான் அதன் நோக்கமும் நிறைவேறக் கூடியதாக இருக்கும். வெறுமனே ஆயுதங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் பயந்து அனுஷ்டிக்கும் ஹர்த்தாலில் என்னதான் உண்மைத் தன்மை இருக்கப்போகிறது. அதன் நோக்கம் நிறைவேறத்தான் போகிறதா? என்பதை எல்லோரும் நன்கு சிந்தித்து செயல்பட வேண்டும்.

இன்னும் சொல்வதானால் இக் ஹர்த்தால் அனுஷ்டிப்பானது சமூகங்களிடையே மீண்டும் மீண்டும் சந்தேகத்தையும், இனக்கலவரங்களையும் தூண்டும் செயலாகக் கூட அமைய வாய்ப்புண்டு. இதற்கு ஏற்கனவே நடந்த பல இனக்கலவரச் சம்பவங்கள் நல்ல சான்று. சில சந்தர்ப்பங்களில் இக் ஹர்த்தால் எதற்காக அனுஷ்டிக்கப்படுகிறது என்பது கூட பொதுமக்களுக்கும், வர்த்தக மற்றும் பொது நிறுவனத்தவர்களுக்கும் தெரியாத சந்தரப்பங்களுமுண்டு. அதே போன்று எவரும், எவ் அமைப்பும் உரிமை கோராமலே வெறும் வதந்தியாகவே அனுஷ்டிக்கப்பட்ட சம்பவங்களும் அதிகமாக உண்டு. இதற்கு உதாரணமாக ஒன்று கடந்த 18-06-2001 இல் சில பிரதேசங்களில் குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் நிகழ்ந்துள்ளது என்றால் இதை என்னவென்று சொல்வது.

கடந்த 18-06-2001 அன்று அத்தினத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்கச் சொல்ல அக்கூற்று சிலரினால் மிகைப்படுத்தப்பட்டு பூரண ஹர்த்தால் தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. ''ஏன் இன்று ஹர்த்தால் என எவரிடம் வினவினாலும் காரணம் தெரியாதே என்ற பதிலே கிடைத்தது. ஆக அன்றைய தினம் இப்பிரதேசத்தில் சகல கருமங்களும் பூரணமாக ஸ்தம்பிதம் அடைந்து ஆயிரக்கணக்கான வறிய மக்களின் தொழில் பாதிப்படைந்தது. அப்பொது மக்கள் இச் செயலை தமது வயிற்றில் அடித்ததாகவே கருதுகின்றனர்.

எனவே தான் ஹர்த்தாலின் உண்மையை உணர்ந்து அதற்கேற்ப அனுஷ்டிப்பதன் மூலமே உண்மையான அதன் இலக்கை அடைய முடியும். அடிக்கடி கண்ட கண்டதற்கெல்லாம் அனுஷ்டிக்கும் போது அதற்கென்று எந்த மரியாதையும் இருக்கப் போவதில்லை நோக்கமும் நிறைவேறப் போவதில்லை.

இனிமேலாவது எதற்கெடுத்தாலும் ஹர்த்தால் அனுஷ்டிப்பதை இயன்றளவு தவிர்ப்பதே சிறந்ததும் இதன் மூலமே சமூகங்களுக்கிடையே எழும் முரண்பாடுகளிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் விடுபட முடியும். இதனை சகல சமூகத்தவர்களும் மனதில் கொள்ளுதல் அவசியம்

# அரசுடன் ஒட்டியிருக்கும் நான்கு எம்.பிக்கள் மீதும் உடன் ஒழுக்க நடவடிக்கையை செயல்படுத்துக!

(மருதமுனை ஹரீஷா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம் தீர்க்கதரிசனமான முடிவுகளையும், நடவடிக்கைகளையும் வெகுவாகப் பாராட்டி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மருதமுனை மத்திய குழு கடந்த 24ம் திகதி நடைபெற்ற விஷேட கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மத்திய குழுத் தலைவரும், அமைப்பாளருமான ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு

01. சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸை கிள்ளுக்கீரையாக பாவிக்கும் ஆட்சியாளர்களின் அநீதிக்கும், அராஜகத்துக்கும் அச்சம் கொள்ளாது தனது நிலையிலும், கொள்கையிலும் உறுதியாக இருந்து இக்கட்டான இச் சந்தர்ப்பத்தில் சி.ல.மு.காங்கிரஸை வழிநடத்திச் செல்லும் எமது தேசியத் தலைவர் சகோதரர் றவூப் ஹக்கீம் அவர்களை இச்சபை வெகுவாகப் பாராட்டுவதோடு, ஆயிரக்கணக்கான மு.கா.உறுப்பினர்கள் அவர் பின்னால் அணி திரண்டுள்ளனர் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் தலைமைத்துவத்திற்கு அறிவிக்கின்றது.

02. கட்சியின் தலைவரை அமைச்சர் பதவியிலிருந்து திடீரென நீக்கி கட்சியின் தன்மானத்திற்கு சவால் விடுத்து, அதிகார அம்மணி அவமதித்ததை ஆட்சேபிக்கும் முகமாக தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்த நுஆ தலைவி திருமதி பேரியல் அஷ்ரப்பை இக்குழு வெகுவாகப் பாராட்டுகிறது. அதேபோல் தங்கள் பிரதி அமைச்சர் பதவிகளை துச்சமென தூக்கியெறிந்த தியாகிகளும் கொள்கை வீரர்களும் ஆன பாராளுமன்ற உறுப்பினர்களான அதாவுல்லா, முனகதீன் அப்துல் காதர், மசூர் ஆகியோரையும் இச்சபை மனமாரப் பாராட்டுவதோடு அநீதிக்கெதிரான தலைவரின் போராட்டத்திற்கு தோள் கொடுத்து துணை புரிந்ததற்காக அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சித் தரப்பில் சென்றமர்ந்த 6 பாராளுமன்ற உறுப்பினர்களையும் இச்சபை பாராட்டுகிறது.

03. கட்சியின் ஆணையை கவனத்தில் கொண்டு வளமான வாழ்வுதரும் உயர் பதவிகளை உதறித், தள்ளிய மு.காவின் உயர்மட்ட அங்கத்தவர்களையும் இச்சபை நன்றியுடன் பாராட்டுகிறது.

04. கட்சியின் தீர்மானத்திற்கு கட்டுப்பட மறுத்து அரச தரப்பில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் மு.கா.எம்பிக்கள் நால்வரையும் கட்சியையும் முஸ்லிம் சமுகத்தையும் காட்டிக்கொடுத்தவர்களாக நாம் கருதுகின்றோம். சமூகத்தினதும் சி.ல.மு.காங்கிரஸினதும் தன்மானத்தைக் காக்கும் பொருட்டு இந்த நால்வருக்கும் எதிராக கட்சி கடும் ஒழுக்க நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதை எமது மருதமுனை சி.ல.மு. காங்கிரஸ் மத்திய குழு முழுமையாக ஆதரிப்பதோடு அதை உடனடியாக அமுல் நடத்துமாறும் தலைமைத்துவத்தை வேண்டிக் கொள்கின்றது.

**கட்சியின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட மறுத்து அரச தரப்பில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் மு.கா. எம்பிக்கள் நால்வரையும் கட்சியையும் முஸ்லிம் சமூகத்தையும் காட்டிக் கொடுத்தவர்களாக நாம் கருதுகின்றோம்.**

05. கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை சிறப்பாக நடாத்த தேசிய தலைவர் எடுக்கும் எல்லா வித செயற்பாடுகளையும் தீர்மானங்களையும் இச்சபை முழுமனதாக ஆதரிக்கின்றது.

மேற்படி தீர்மானங்களின் பிரதிகள் மு.கா.தேசியத் தலைவர், நுஆ தேசியத் தலைவியும் உட்பட ஏனைய 9 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மதங்களுக்கிடையிலான சர்வசமய சமாதானக் கருத்தரங்கு

(காரைதீவு நிருபர்)

மதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பு இம்மாதம் 29,30 ஆம் திகதிகளில் சர்வசமய சமாதான கருத்தரங்கொன்றை கல்முனையில் நடாத்தவுள்ளது.

கல்முனை கிறிஸ்தியா இல்லத்தில் தேசிய அமைப்பாளர் வண.மாதம்பாகம அஸ்ஸஜீ நாயகதேரோ தலைமையில் இவ் இருநாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அண்மையில் வன்னிக்குச்சென்று விடுதலைப் புலிகள் அமைப்பைச் சந்தித்து வந்த இம் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு யுத்த சூழ்நிலையில் வாழும் மக்கள் மத்தியில் இப்படியான சர்வசமய சமாதான கருத்தரங்குகளை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த 45 பேர் இவ்வதிவிடக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் எச்.பொடிநிலமே கூறினார்.

## "தாயின் அரவணைப்பிலேயே பிள்ளைகளின் எதிர்காலம்"

**சட்டத்தரணி பிரேம்நாத்**

மட்டக்களப்பு மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த 10ம் திகதி காலை 10.00 மணிக்கு சங்க அலுவலகத்தின் அதன் அமைப்பாளர் தமிழ்ப்பண்ணை ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேரின்பம் பிறெம்நாத் சட்டத்தரணி நடப்பு வருடத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதுத் தலைவர் தமது சிறப்புரையில் பெண்களையும் விதவைகளையும் சமுதாயம் பேணிப் பாதுகாக்க வேண்டும். அவர்களது சரீர குடும்ப மனக் குறைகள் களையப்படுவதோடு சிறப்பான எதிர்காலம் நாட்டில் அமைய அவர்கள் சிறக்க வாழ வேண்டும். தாயின் அரவணைப்பிலேயே பிள்ளைகள் சிறப்பான எதிர்காலத்தினுள் புக முடியும். ''பிள்ளைகள் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே'' என்று கவிஞர் பாடிய பாடல் வரிகள் நமக்கு இதனையே சுட்டி நிற்கிறது. பாதுகாப்புக் கெடுபிடிக்குள்ளாகும் பெண்களின் நன்மையும், எதிர்காலமும் பல கருதி, இச்சங்கம் நல்ல நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கிறது. இவை சிறப்புற மனிதம் சிறப்புடன் வாழும் என்றார்.

இத்தோடு சங்கத்தின் செயலாளராக மா.சுரேஸ்குமார் அவர்களும், பொருளாளராக திருமதி.மேகலா சத்தியசீலம் அவர்களும், குழு உறுப்பினர்களாக பதின்நான்கு பேரும் தெரிவாகியுள்ளனர்.

## கால வளர்ச்சிக்கு ஏற்ப இளைஞர்களின் ஆற்றல்களும் வளரவேண்டும்

(மருதமுனை நிருபர் நழீம்.எம்.பதுர்தீன்)

இளைஞர்களின் இதயத்துக்குள் எத்தனையோ ஆற்றல்கள் புதைந்து கிடக்கின்றன. இந்த ஆற்றல்களில் எழுத்துத் துறையும் ஒன்றாகும். நவீன தொழில் நுட்பம் உச்ச வளர்ச்சியடைந்து வரும் இக்கால கட்டத்தில் இளைஞர்களும் தத்தமது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இலக்கிய நயமும், சொல்வளமும், கற்பனை வளமும்,இலக்கணத்துறையில் பூரண அறிவும், நன்னூல் களை வாசித்தலும், ஆராய்ச்சி செய்தலும் எழுத்துத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு மிக அவசியமான உசாத்துணை அம்சங்களாகும்.

இவ்வாறு பத்திரிகையாளரும், சிரேஷ்ட ஆசிரியருமான எஸ்.சிறாஜுத்தீன் கூறினார்.

நற்பிட்டிமுனை மிலேனியம் இளைஞர் கழகம் நடாத்திய முத்தமிழ் அரங்கின் முதல் நாள் நிகழ்வில் ''எழுத்துத் துறையில் இளைஞர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்ற தலைப்பின் கீழ் விரிவுரை நிகழ்த் தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் அண்மையில் (26-05-2001) கழகத்தின் தலைவர் காதர் எம்.தௌபீக் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசிய செய்தியாளர் சிறாஜுத்தீன் அவர்கள் கூறியதாவது.

மேற்கத்திய கலை, கலாசாரங்கள் எம் இளைஞர்களிடையே ஊடுருவி இன்று சிக்கித் தவிக்கும் இளைஞர் சமூகம் தனது பொன்னிலும் மேலான நேரத்தை ஆபாசக் கொட்டகைகளிலும், ஆபாசப் புத்தகங்களை வாசிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருவது கவலைக்குரிய ஓர் விடயமாகும்.

சினிமா நடிகர்களையும், கிரிகட் அணியினரையும் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு, எழுத்தாளர்களையோ, பத்திரிகையாளர்களையோ இன்றைய இளைஞர்கள் அறிந்து கொள்ள எத்தனிப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். எதை வாசிப்பதென்றாலும் முதலில் மொழியை நேசிக்க வேண்டும் என்றார்.

ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர் அருட் சகோதரர் எஸ்.ஐ.ஏ.மத்தியூ, அஷ்ரப் பவுண் டேசன் தவிசாளரும் உதவிக்கல் விப்பணிப்பாளருமான அல்ஹாஜ் எஸ்.எம்.இப்றாகீம் (ஜே.பி) அம்பாறை மாவட்ட திட்டமிடல் செயலக அபிவிருத்தி உத்தியோ கத்தர் எஸ்.பஜுருத்தீன் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



**கவிச்சுடர் அன்பு முகையதீன் எழுதிய 'உத்தம நபிவாழ்வில்' கவிதை நூல் அறிமுக விழா கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற போது மௌலவி இஸ்ட் எம்.நதீர் (உதவிக் கல்விப்பணிப்பாளர்) நூல் ஆய்வுரை செய்வதையும், பிரதம அதிதியாகக் கலந்த கொண்ட மகப்பேறு நிபுணர் டாக்டர் ஏ.எல்.எம்.ஜமீல் அவர்களிடமிருந்து கல்முனை ஹட்டன் நெஷனல் வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம்.நசீர் சிறப்புப் பிரதி ஒன்று பெறுவதையும் படங்களில் காணலாம். அருகில் கவிச்சுடர் அன்பு முகையதீனும் காணப்படுகின்றார்.**

## ஏறாவூர் பிரதேசத்தில் தலைமைத்துவப் பயிற்சி

(ஓட்டமாவடி நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏறாவூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி அண்மையில் நடைபெற்றது.

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் கே.விமலநாதன் தலைமையில் டாக்டர் பரீட் மீராலெப்பை கலாசார, மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி நெறியில் ஏறாவூர் நகர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சி நெறியின் போது பல முக்கிய பிரமுகர்களால் வெவ்வேறு தலைப்புக்களில் கருத்துமிக்க பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

**உங்கள் வீட்டுக்குத் தேவையான**
ஒட்டு மா, மூங்கில், நெல்லி, கொய்யா, பலா, விழி,
அம்பரல்லா, தேக்கு மற்றும் அலங்கார மரங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்:-
மன்றப். சரவணா வீதி. இல:-19. கல்லடி. மட்டக்களப்பு.
தொலைபேசி இலக்கம்:- 22500 Advt

# பெண் கருக்கலைப்பை எதிர்த்து மதத்தலைவர்களும் பிரசாரம்

(புதுடில்லி)

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் நடந்த ஒரு மாநாட்டில் அரசியல் வாதிகள், மருத்துவர்கள், பெண்ணுரிமையாளர்கள், மதத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

பெண் கருக்களை பிரித்துவிடும் நிலை திடீரென பெருகியிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிப்பதால் அதனை முற்றாக ஒழிப்பதற்கு உரிய வழிகளைக் காண விவாதிப்பதற்காகவே அனைத்து மதத் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நேற்று முழுவதும் நடைபெற்ற இந்த மாநாட்டில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் இந்து, இஸ்லாம், சீக்கியர், உள்ளிட்ட பல மதங்களின் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

பெண் சிசுக்களை அல்லது பெண் கருக்களை அழிக்கும் போக்கு இந்திய சமூகத்தில் நிலவுவது குறித்து அதிக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என்று இவர்கள் கூறினார்கள்.

தங்கள் மத உரைகளின் போதும் இது குறித்து நிட்சயம் பேசுவோம் என்றும் அவர் .கள் மாநாட்டின் முடிவில் உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

இந்த மாநாட்டுக்கு ஐக்கிய நாடுகள் மன்ற குழந்தைகள் கல்வி வளர்ச்சி நிதியம் இந்திய மருத்துவர்கள் சங்கம், மற்றும் தேசிய பெண்கள் ஆணையம் என்பன கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

இந்த தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவி பார்த்த சாரதி. இந்திய மக்கள் தொகையில் பெண்கள், ஆண்கள் விவகாரத்தில் சமச்சீரற்ற நிலை, அதாவது ஆண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதினால் வரக்கூடிய சமுதாய அபாயங்கள் பற்றியும் பெண் பாலாருக்கு எதிராக நிலவும் தவறான கண்ணோட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தையும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கூறினார்.

கருவிலே கொல்லப்படும் பெண்கள் பற்றி கவலை தெரிவித்தால் மட்டும் போதாது. பிறக்கப்போகும் குழந்தையின் வாழ்க்கை உரிமையை உறுதி செய்ய வேண்டியதன் அவசியமும் இருக்கின்றது என்று அவர் எடுத்துரைத்தார்.

இந்தப் பிரச்சினையை சமாளிக்க மதத் தலைவர்களின் பங்கும் அவசியம் என்றும் தீபா பார்த்த சாரதி கூறினார்.

இந்தியாவில் இந்த ஆண்டு முடிந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளி விபரங்கள் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட மிக குறைந்த நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

பெண்கள் கரு, சிசு கொலைகள் பற்றி இந்தியாவில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்த போதிலும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

# பெருநாட்டில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி ஏற்படுத்திய சேதங்கள்

(லிமா)

தென்னமெரிக்காவின் அன்டிஸ் மலைத்தொடருக்கு அருகே தாக்கிய நில அதிர்ச்சி எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தது என்பது கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவாகிக்கொண்டு வருகின்றது.

இவ்வாறான சேதங்கள் பெரு நாட்டிலும் ஏற்பட்டுள்ளன. இதுவரை 50 பேர் வரை இறந்திருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள அதேநேரம் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருக்கிறார்கள்.

ரிச்டர் அளவில் கிட்டத்தட்ட எட்டு ரிச்டர் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தில் சாலைகள் பிளந்து துண்டாடப்பட்டுள்ளதுடன் மின்.தொலைபேசி இணைப்புக்களும் செயலிழந்துபோயுள்ளன.

இதனால் மோசமான சேதங்கள் பெரு நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான அரிகியுபா என்ற நகரில் ஏற்பட்டுள்ளது. அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல கட்டிடங்களும் அழிந்து போயுள்ளன.

இதன் முக்கியமான இன்னுமொரு நகரம் சீட்டுக்கட்டு பரப்பப்பட்டது போல இடிந்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரக்குப் பொருட்கள், கம்பளங்கள், கூடாரங்கள் என்பனவற்றுடன் இராணுவத்தின் விமானங்கள் நிவாரணப்பணிகளில் இறங்கியுள்ளன.

நில நடுக்கத்தின் பின் வீடுகளுக்கு செல்வதற்கு மக்கள் அஞ்சி பூங்காக்குள்ளும் வெளிகளிலும் கழித்தார்கள்.

பெரு நாட்டின் அடுத்த அதிபராக தெரிவாகியிருக்கும் தொல்லிடு அவர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களைச்சென்று பார்ப்பதற்காக அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்வதாக இருந்த தனது பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

# இந்திய பாக்கிஸ்தான் பேச்சுக்களில் இடம் கேட்கும் குரியத் மாநாட்டுக் கட்சி

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் உள்ள முக்கிய கட்சியான அனைத்து கட்சி குடியரசு மாநாடு இந்தியாவும் பாக்கிஸ்தானும் பேசவிருக்கும் உச்சி மாநாட்டில் தம்மையும், கலந்தாலோசிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை முக்கியத்துவம் பெற்றும், குரியட் மாநாட்டின் தலைவர் அப்துல் கானிட் அவர்களுடைய ஆதரவாளர்கள் உட்பட அனைவருமே கடந்த காலச் சம்பவங்களில் ஏற்பட்ட முறுகல் நிலை பதட்டநிலை ஏதுமற்ற புதிய சமூதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இது நடைமுறைக்கு வர வேண்டுமானால் குரியட் மாநாடும் இந்தப் பேச்சின் போது உள்ளடக்கப்படவேண்டும் என்று அப்துல் காலித் தெரிவித்தார்.

பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் அதிபர் பெவரல் முஷாரப்புக்கும் இடையில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பு இரண்டு தலைவர்களையும் தனித்தனியே சந்தித்துப் பேச தமக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் இந்தச் சந்திப்பில் வாஜ்பாயை சந்திக்க குரியட் மாநாட்டு கட்சிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்போவதில்லை என்று அதிகாரிகள் அறிவித்து விட்டார்கள்.

# மேலதிக முதலுதவிப் பயிற்சி

(மண்முனைப்பற்று நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை தனது மாதாந்த பொதுக் கூட்டத்தினையும் மேலதிக முதலுதவிப் பயிற்சி வகுப்பினையும் கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மண்டபத்தில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பிரதேச முதலுதவிக் குழு செயலாளர் செல்லத்தம்பி தேவதாஸ் தலைமையில் நடாத்தியது.

மற்றும் மாதாந்த பொதுக் கூட்டத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளையின் உப செயலாளர் மா.சதாசிவமும், மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு மாவட்ட முதலுதவிக்குழு செயலாளர் சோமசுந்தரமும், மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பொதுச்சுகாதார பரிசோதகர் எம்.நாமலிங்கமும், மண்முனைப்பற்று பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தரான ச.சந்திரசிறியும், மண்முனைப் பற்று குடும்பநல உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# அரசின் பாதுகாப்பு வேண்டாம் என மேயர் ஸ்டாலின் மறுப்பு

(சென்னை)

சென்னை மேயர் மு.க.ஸ்டாலின் அரச பாதுகாப்பு வேண்டாம் என்று அவரே கூறி விட்டார் என்று இப்போது தமிழக அரசு உட்துறை செயலாளர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டாலினுக்கு பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த 'பொலிஸாரை அவரே திருப்பி அனுப்பி விட்டார். அந்த முடிவுக்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்று தமிழக அரசு உட்துறைச் செயலாளர் நரேஸ் குப்தா தெரிவித்திருக்கிறார்.

ஸ்டாலின் பாதுகாப்பு விவகாரம் முதலில் அரசியல் ஆக்கப்பட்டது. இப்போது அதிகாரிகளும் அறிக்கைவிடத் தொடங்கிவிட்டார்கள் மூன்று நாட்களுக்கு முன் மாநகர ஆட்சி கூட்டத்தில் குழப்பம் ஏற்பட எதிர்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றுமாறு ஸ்டாலின் உத்தரவிட அவரது கட்டளையினை நிறைவேற்ற மாநகர ஆட்சி காவலர்கள் மறுத்து விட்டார்கள்.

ஸ்டாலினுக்கு மிகவும் தர்மசங்கடமாகிப் போனது. ஒரு கட்டத்தில் அவரே கூட்டத்தை ஒத்தி வைக்கும் நிலையும் ஏற்பட்டது. மாநகர ஆட்சி காவலர்கள் தான் என்றாலும் மாநில காவல் துறையைச் சேர்ந்தவர்கள். ஆள்வதோ அ.தி.மு.க. எனவே, தி.மு.க.வைச்சேர்ந்த ஸ்டாலினின் உத்தரவை அவர்கள் நிறைவேற்ற மறுத்தார்கள் என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. இந்த சம்பவம் நடந்த ஓர் இரு நாட்களுக்குப் பின் ஸ்டாலின் தனக்கு அரச பாதுகாப்பே தேவையில்லை எனக்கூறி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவருக்கு முதலில் மாநகர ஆட்சியில் நேரிட்ட அவமானம், பிறகு வெளியூர் சுற்றுப் பயணத்தின் போது முன்னர் போல் பாதுகாப்பு பொலிஸார் வரமாட்டார்கள் என அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர் அரச பாதுகாப்பே தேவையில்லை எனத் தெரிவித்துவிட்டார்.

இவருக்கு பதிலடியாக நடேஸ் குப்தா தாங்கள் ஒன்றுமே செய்யவில்லை. அவராகவே பாதுகாப்புத் தேவையில்லை என்று கூறிவிட்டார் என்றார்.

# வண. வில்லியம் ஓல்ட் ஐயருக்கு மட்டக்களப்பில் நினைவுத் தூபி

(கல்லாறு நிருபர்)

1814ல் இலங்கை காலி வெலிகம கடற்கரையில் மெதடிஸ்த திருச்சபை பணிகளை மேம்படுத்த வந்திறங்கிய வண. வில்லியம் ஒல்ட் ஐயரின் நினைவாக மட்டக்களப்பு பொது நூலக ஆற்றுமுனைக் கருகில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரி உருவாவதற்கு உறுதுணையாக இருந்த வண. வில்லியம் ஒல்ட் ஐயர், மட்டக்களப்பில் தற்போது நினைவுத் தூபி அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள ஜெற்றி லேயே வந்திறங்கினாராம்.

இந்த நினைவுத் தூபியை எதிர்வரும் 30ந் திகதி இலங்கை மெதடிஸ்த சபையின் தலைவர் வண.நோயல் பெர்ணாண்டோ திறந்து வைக்கின்றார்.

கௌரவ விருந்தினர்களாக வண.எஸ்.ஜே.கதிரேசப்பிள்ளை, வடகிழக்கு மெதடிஸ்த சபா சங்கத் தலைவர் வண.எஸ்.எஸ்.கருணைராஜ், முன்னாள் வடக்கு கிழக்கு மெதடிஸ்த சபா சங்கத் தலைவர் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இந்த வைபவத்தை முன்னிட்டு மட்டு கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலய வளவிலிருந்து அன்றைய தினம் ஊர்வலம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ஏறாவூர் பிரதேசங்களில் 40 விவசாய கிணறுகள்

(ஓட்டமாவடி நிருபர்)

ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமம், மிச்நகர், தாமரைக்கேணி, ஐயங்கேணி போன்ற பிரதேசங்களில் விவசாய செய்கைகளில் ஈடுபட்டு வருகின்ற விவசாயிகளின் நன்மை கருதி இப் பிரதேசங்களிலுள்ள பல்வேறு விவசாய செய்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் 40 விவசாயக் கிணறுகள் அமைக்கப்பட விருக்கின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக உறுகாமம் போன்ற பகுதிகளிலிருந்து அகதிகளாக இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இப்பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் இப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களை பயன்படுத்தி விவசாயச் செய்கையினை மேற்கொள்வதில் கடந்த காலங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர். இப்பகுதிகளில் தற்போது அமைய இருக்கும் சுமார் 40 விவசாய கிணறுகளினால் கூடுதலான அளவு நன்மையடைவதுடன், இன்னும் கூடுதலான அளவில் விவசாயச் செய்கையில் ஈடுபட முடியும் என்றும் இப்பகுதி வாழ் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# நாவிதன்வெளி குளம் புனரமைப்பு

(நற்பிட்டிமுனை நிருபர் ஏ.எஸ்.எம்.முஜாஹித்)

வடக்கு கிழக்கு மாகாண நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் மூலம் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நாவிதன்வெளி குளம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாவிதன்வெளி பகுதியிலுள்ள 540 ஏக்கர் வயல் நிலங்களில் விவசாயம் மேற்கொள்ள முடியுமெனவும், இத்திட்டம் பூர்த்தியடைந்ததும் அப்பகுதியில் வாழும் மக்களின் சகல தேவைகளும் நிறைவு செய்யப்படுமெனவும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தெரிவித்தார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப கூட்டம் அண்மையில் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென சேவாலங்கா நிறுவனத்தின் பிரதேச வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.லிங்கராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இக் கூட்டத்திற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர்கள் அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஆலய பரிபாலன நிர்வாகிகள்

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிகுடி ஸ்ரீ மதுரை மாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்கு செயல்படக்கூடிய வகையில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- பரமானந்தராசா
உபதலைவர்:- க.தில்லேஸ்வரன்
செயலாளர்:- க.சண்முகலிங்கம்(கி.உ)
உபசெயலாளர்:- ச.சாத்வீகராசா
பொருளாளர்:- வ.சின்னராசா
போசகர்கள்:- ஸ்ரீலஸ்ரீ மு.முத்துக்குமரன் குருக்கள்
எஸ்.சுப்பிரமணியம்
தி.ரகுபதி
வி.ரஞ்சிதமூர்த்தி

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வே.பாக்கியரத்தினம், கு.சண்முகம், க.சத்தியநாதன், செ.ஜெயராசா, பூ.தருமலிங்கம், கை.சுந்தரலிங்கம், ந.பாலசந்திரன், ச.ஞானசிங்கராசா, வ.கந்தசாமி, ந.வினாயகராசா, கா.யோகேந்திரன், அ.உதயகுமார், வே.கோவிந்தராசா, ஜெ.ஜெயநந்தன், க.குணரெத்தினம், க.யோகநாதன், க.பாலிப்போடி, ந.மார்க்கண்டு, தவச்செல்வம், க.யோகநாதன் ஆகியோரும் கணக்குப்பரிசோதகராக வி.ரவீந்திரமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பத்திரிகையாளர்கள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கம் பத்திரிகையாளர் நல் வாழ்வுக்காக அளப்பரிய பணியாற்றி வருவதை யாரும் மறுக்க முடியாது. சங்கத்தின் எதிர்கால வெற்றி உறுப்பினர்களிடையே ஏற்படும் புரிந்துணர்விலேயே தங்கியுள்ளது. பத்திரிகையாளனது எழுத்துக்கள் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். என்னால் எழுதப்பட்ட கட்டுரையொன்று தென்கிழக்கு பல்கலைக்கழகம் உருவாகக் காரணமாக அமைந்ததை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவ்வாறு அண்மையில் நிந்தவூர் அல்-அஷரக் தேசிய பாடசாலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாதாந்த கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்க தலைவர் மீரா.எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.




தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அண்மையில் நடாத்திய தமிழ்க்கலை இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த கிழக்கிலங்கையர் என்ற கருத்தரங்கின் போது பாவலர் பஸீல் காரியப்பரின் ''ஆத்மாவின் அலைகள்'' என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டது. அதன் சிறப்பு பிரதியை தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி அல்ஹாஜ் மௌலவி காதீன் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சித்திரலேகா மௌனகுருவுக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

(படமும்,தகவலும்:- பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

# கூழாவடி இந்து இளைஞர் பத்தாண்டு விழா

(அரியம்)

மட்டக்களப்பு மாநகர சபைப்பகுதியில் உள்ள கூழாவடி இந்து இளைஞர் மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஜூலை 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கூழாவடி இந்து இளைஞர் மன்ற பணிமனையில் கூழாவடி மன்றத்தின் தலைவர் க.நடராசா தலைமையில் இடம் பெறும்.

இவ்விழாவில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜின் ஆசி உரையும் பிரதம அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.கதிர்காமநாதன், சிறப்பு அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் க.தங்கேஸ்வரி மட்/வின்சன்ட் மகளிர் தேசிய கல்லூரி அதிபர் சுபா சக்கரவர்த்தி, கௌரவ அதிதிகளாக ஆசிரியர் சிரோண்மணி த.செல்வநாயகம் சங்கீதத்துறை உதவி கல்விப்பணிப்பாளர் ரஜனி நடராசா, சங்கீத பூசணம் சாந்தாவதி நாகையா, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பல கலை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் இடம் பெறுவதுடன் இரா.லோகேஸ்வரனின் நிகழ்ச்சித் தொகுப்புடன் யோகராசாவின் நன்றியுரையுடன் நிறைவுறும்.

# நாவிதன்வெளி பிரதேசத்தில் 'சமுர்த்தி மன்றம்' அமைப்பு

(நற்பிட்டிமுனை நிருபர்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சுற்று நிருபத்திற்கமைய நாட்டின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சமுர்த்தி நலன்பேணும் 'சமுர்த்தி மன்றம்' அமைக்கப்பட்டுள்ளது. இதுபோல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலும் அண்மையில் சமுர்த்தி மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் அண்மையில் பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தலைமையில் நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டத்தின் போதே இம் மன்றம் உருவாக்கப்பட்டது. இதில் சமுர்த்தி தலைமைப்பீட முகமையாளர் ரீ.சபாரெத்தினம், உதவி முகாமையாளர்கள் எம்.எச்.கபீர், யூ.எல்.றகுமதுல்லாஹ், தலைமை எழுதுநர் ஏ.எஸ்.எம்.முஜாஹித் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

இக் கூட்டத்தின் போது பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர்:- ஏ.விஜேந்திரன்
செயலாளர்:- யூ.எல்.றகுமதுல்லாஹ்
பொருளாளர்:- எஸ்.நிமலாகரன்
உபதலைவர்:- கே.ராசமலர்
உபசெயலாளர்:- எஸ்.கருணாவதி.

# மூளைக்காய்ச்சலுக்கு தடுப்பூசி

(காரைதீவு நிருபர்)

காரைதீவுப்பிரதேச சுகாதார வைத்தியப் பணிமனை தமது பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 1-10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இதுவரை தடுப்பூசி ஏற்றப்படாத பிள்ளைகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

இதே வேளை காரைதீவு சுற்றயல் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட பல் வைத்திய சிகிச்சை நிலையம் இன்னும் திறக்கப்படாமல் சீரழிந்து வருகிறது.

டாக்டர் ஒருவர் வரச் சம்மதித்தும் அங்கு ஒரு அமைப்பு முயற்சி எடுக்காத காரணத்தால் சிகிச்சை நிலையம் திறப்பது பின்னடைந்து வருவதாக கூறப்படுகிறது.

# வவுனியா வளாகத்திற்கு கணணிகள்

(ச.மயூரவதனன்)

வவுனியா வளாகம் யாழ் பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்திற்கு ஆறு புதிய கணணிகள் அண்மையில் கிடைக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு வியாபார கற்கைகள் பீட மாணவர்கள் கணணி அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கு பீடாதிபதி ஆர்.நந்தகுமார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஆறு மாணவர்களை ஒவ்வொரு குழுவாக பிரித்து வாரத்தில் இரண்டு மணி நேரம் கணணிப் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

# தலைமைத்துவ பயிற்சி நெறி

(காரைதீவு நிருபர்)

கல்முனை சமாதான அமைப்பின் கடந்த சனியன்று கல்முனை அல்-பஹ்ரியா வித்தியாலயத்தில் தலைமைத்துவ பயிற்சி நெறியொன்றை நடாத்தினர்.

வித்தியாலய அதிபர் ஏ.சீ.எம்.அபூபக்கர் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் மாணவ தலைவர்களும், வகுப்புத் தலைவர்களும் கலந்து பயிற்சி பெற்றனர். சமாதான அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் எம்.எச்.எஸ்.சபியா தலைமையிலான வள ஆளணியினர் பயிற்சி நெறியினை வழங்கினர்.

# கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிப் பரீட்சை

(கல்லாறு நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு கல்லூரியில் நடாத்தப்படும் கூட்டுறவு பணியாளர் சாதாரண பயிற்சிக்கான பரீட்சை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிறுவனங்களில் இம் மாதம் 25ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை நடைபெற இருக்கின்றது.

இம்முறை கல்முனை, மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபைகளின் ஊடாக பல பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தோற்ற இருக்கின்றனர்.

# ஆலய வருடாந்த உற்சவம்

கல்லடி உப்போடை விபுலானந்த வீதியில் கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற உள்ளது. பிற்பகல் 3.30க்கு பூசை நடைபெறும்.



பாண்டிருப்பு பாரதி இளைஞர் கழகத்தின் மாதாந்த செயற்திட்டத்தின் படியும், பாண்டிருப்பு முத்து மாரியம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டும் கழக உறுப்பினர்கள் ஆலயச் சூழலில் சிரமதானப் பணியினை மேற்கொள்வதை படங்களில் காணலாம்.

(படமும் தகவலும்:- பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

# பரீட்சை முடிவு வெளியாகவில்லை!

(காரைதீவு நிருபர்)

1999இல் நடைபெற்ற கணக்குப்பதியுநர், சிறாப்பர் களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் சிற்றூழியர்கள்ப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியாகவில்லையென சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை 2000 நவம்பரில் நடைபெற்ற பொது எழுதுநர்சேவை அதிசிறப்பு தரத்திற்கான பதவியுயர்வுப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

எனவே, இதற்கு முன்பு நடைபெற்ற பரீட்சை முடிவுகளை வெளியாக்குவதில் தாமதமேன் என அவர்கள் கேட்கின்றனர்.

# சமாதானத்தின் மறுபக்கம்

**செழியன்.இ.கௌதம்**

கடந்த இரு வருடங்களாக மெல்ல ஒளிர்விட்ட சமாதானப் பேச்சுவார்த்தை சென்ற நவம்பர் மாதம் தொடக்கம் முழுவேகம் பெற்று இலங்கையில் வாழும் சகல சமூக மக்கள் மனதிலும் ஏக்கத்தை தோற்றுவித்தது. அத்தோடு எமது நாட்டின் இனப்பிரச்சினையின் பால் ஈடுபாடு கொண்ட சர்வதேச சமூகம், மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர் மத்தியிலும் எம் நாட்டில் அமைதி தோன்றி விடும் என்ற வாஞ்சையோடு கவிஞரின் ''மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்லை நாங்க மட்டும் உலகத்தில் வீடு திரும்ப வழியில்லை'' என்ற பாடலை மீட்டிருந்தன.

நோர்வேயின் சிறப்பு பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்ததும் அதன் பின்பு மாவீரர் தின உரை மூலம் சமாதானத்துக்கான அழைப்பும், தொடர்ந்து ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த அழைப்பும் ஏதோ, சமாதானம் எம்மை மிக நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது என்று மக்களனைவரையும் மகிழ்ச்சி கொள்ளச்செய்தது எனினும் புரிந்துணர்வு உடன்படிக்கை எனும் ஓர் வரைபு ஒப்பந்தத்தை எரிக்சொல்ஹெய்ம் தயாரித்து அதற்கு, விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்தமையும் இலங்கை அரசு அரை மனத்துடன் மெல்ல இழுத்தடிப்பு செய்ததோடு இந்தியாவுடன் ஆலோசனை செய்த பின்பு புரிந்து ணர்வு உடன்படிக்கையின் அடிப்படை அம்சத்தையே மாற்றி மனிதாபிமான உதவிகளுக்கான ஒப்பந்தம் என பெயர் மாற்றம் செய்தமையும். இதனை விடுதலைப்புலிகள் நிராகரித்ததுடன் பேச்சுவார்த்தை ஏற்பாடுகளில் சுருதி பேதம் ஏற்படத்தொடங்கியது.

இங்கு நாம் கடந்த 1994-1995ஆம் ஆண்டில் நடந்த நான்கு மாத கால பேச்சுவார்த்தையை நோக்குவோமானால் அப்போது பொருளாதாரத்தடை நீக்கம், பாதை திறப்பு போன்றவற்றை செய்வதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்பதின் நோக்கமாகவே ஆரம்ப தொடர் பாடல்கள் வவுனியாவில் நிறைவேற்றப்படாமை சொல்வதொன்று செய்வதொன்று என மக்களின் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிக்க முடியாமலே அரசியல் பேச்சுவார்த்தை ஆரம்பமாகு முன் பரஸ்பர புரிந்துணர்வு அற்ற நிலையில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாயின. இதனைக் கருத்திற் கொண்டே இம்முறை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டப்பட்டு, நோர்வேயின் உதவி பெறப்பட்டமையும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகுமுன்பே, புரிந்துணர்வு ஒப்பந்த மூலமாக பொருளாதாரத் தடையினை விலக்கி, பேச்சுவார்த்தையை 'நடைபெறும் காலத்தில் மோதலைத் தவிர்த்து இவற்றை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்களையும் பெறுவதன் மூலம் ஓர் சிறப்பான அடித்தளத்தை இட்ட பின்பு அரசியல் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க நோர்வேயின் உதவியோடு விடுதலைப்புலிகள் திட்டமிட்டனர்.

ஆரம்பத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தரை ஆமோதித்த அரசு விடுதலைப் புலிகளின் இராஜதந்திர நகர்வுக்குள் தாம் மெல்ல மெல்ல இறுகுவதை உணர்ந்ததும், தமது வழமையான காலங் கடத்தும் தந்திரோபாயத்தை மேற்கொள்ளத்தொடங்கியது. எரிக்சொல்ஹெய்ம் இங்கு வரும் போது ஜனாதிபதியும், வெளிநாட்டமைச்சரும் வேறுநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வது, விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அழைப்புக்கெதிராக அவர்கள் பலவீனமாக உள்ளனர் என்று பிரசாரம் செய்து அதனை திசை திருப்பலிடல் என இழுத்தடித்த போதும் தங்கள் இராணுவ பலத்தை அதிகரிக்க தேவையான சகல நடவடிக்கைகளையும் முழுமூச்சாக மேற்கொள்ளத்தொடங்கினர். அத்தோடு போர் நிறுத்த காலத்தில் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டதோடு நான்கு மாத கால யுத்த நிறுத்தம் முடிவடைந்த கையோடு உடனடியாக பாரிய படைநகர்வொன்றையும் மேற்கொண்டனர் எனினும் ''அக்கினிகில'' எனும் அப்படை நகர்வு நடவடிக்கை தோல்வியில் முடிந்து விடுதலைப்புலிகள் எதிர்பார்த்தவாறு பலவீனமாக இல்லை என உணர்ந்ததோடு தங்களது கனரக ஆயுதப்பெருக்கம் மட்டும் இராணுவ வெற்றிக்கு போதாது என ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையை அடைந்தவேளை, மறுபுறம் இந்த நடவடிக்கைகள் மூலமாக உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகள் அரசியல் வளர்ச்சி பெற்று பேரம் பேசும் ஆற்றலை வளர்த்து விட்டனர் எனக் கண்டுகொண்டனர்.

சர்வதேச சமூகத்தின் கண்காணிப்போடு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசியல் பேச்சுவார்த்தைக்குச் சென்றால் எதைப் பேசுவது, எந்த அடிப்படையில் ஆரம்பிப்பது என்ற தெளிவு இல்லாமல் மேசையில் எந்த முகத்தோடு அமர்வது, இதனால் அரசின் முகத்திரை கிழிந்து விடும் என்ற பயமே அரசின் இத்தனை குழப்பங்களுக்கும் காரணமாகும். ஏனெனில் 1995ம் ஆண்டு அரசியல் தீர்வின் ஆலோசனை என முன் வைக்கப்பட்டு 1998ம் ஆண்டு பேரினவாத அழுத்தம் காரணமாக கழுதை தேய்ந்து கட்டெறும் பானது போல் வந்த தீர்வுத்திட்டத்தை தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் கூட முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்தமையும் இதனைக்கூட பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்தக்கூட திராணியற்ற அரசு பேரினவாத சக்திகளை சமாளிக்க உடனடியாக அவர்களது சார்பாக ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரதமராக்கியதும் தேர்தல் பிரச்சாரத்தின் போது அவர் மூலம் யுத்தமே தீர்வு என மக்கள் மனதில் இன உணர்வினைத் தோற்றுவித்துவிட்டு இப்போது பேச்சுவார்த்தை என எதைப் பேசுவது என்று முற்றாகவே குழம்பிப்போனது.

பேச்சுவார்த்தை என விடுதலைப்புலிகளுடன் அமரும் போது வடக்கு கிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகப்பகுதி, என்பன பேச்சுவார்த்தைக்கப்பாற்பட்ட விடயங்களாக ஏற்க வேண்டி வரும் என்பது அரசுக்கு தெரியும். இந்த விடயங்களை தாமே ஊற்றி வளர்த்த இனவாத நெருப்பில் குளிர்காயும் அரசுக்குள்ளும். வெளியிலும் இருக்கும் எவரும் ஏற்றுக்கொள்ளப்போவதும் இல்லை அதோடு விடுதலைப்புலிகளுடன் பேசி ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வுத்திட்டத்தை தனது அரசாங்கத்தில் உள்ளவர்களைக் கூட ஏற்றுக் கொள்ளச் செய்யும் தார்மீக பலம் தற்போதய அரசிடம் கிடையாது. அப்படி இருக்கும் போது அதனை எவ்வாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு 2/3 பெரும்பான்மை பலத்துடன் சட்டமாக நிறைவேற்றுவது. இது தற்போது அரசாங்கத்தைப் பொறுத்தவரை தற்கொலைக்கு சமமானதாகும்.

இத்தனை சிக்கல்களுக்கும் காரணமாக நாம் தற்போதய அரசினை மட்டும் குற்றம் காண முடியாது. இதற்கு மூல விதையை இட்டவர் 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பினை கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா ஆகும். அவர் அப்போது பாராளுமன்றத்தில் அவருக்கிருந்த மிகப்பெரும் பான்மை பலத்தினைக் கொண்டு இவ் அரசியல் யாப்பினை உரு வாக்கியதோடு, கொண்டு வந்த தேர்தல் முறையின் மூலம் தனக் குப்பின் எவரும் இந்த அரசியல் திட்டத்தின் கீழ் தன்னைப் போல் சர்வ அதிகாரங்களும் பெற்ற ஜனாதிபதியாக இருக்க முடியாது செய்து விட்டு சென்றார். அதாவது தற்போதய தேர்தல் முறையின் கீழ் எந்தக் கட்சி ஆட்சியைப்பிடித் தாலும் 2/3 பெரும்பான்மையைக் கொண்டிருக்க முடியாது. எனவே முக்கியமான அரசியல் திருத்தங் கள் மேற்கொள்ள வேண்டுமா னால் எதிர்க்கட்சியின் உதவியின்றி சட்டமாக்க முடியாது.

எனவே, அரசாங்கம் முழுமனதோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தால் கூட அதனைச் சட்டமாக்குவது என்பது தற்போதய இலங்கையில் உள்ள அரசியல் சட்டத்தின் கீழோ மற்றும் அரசியல் கட்சிகளின் சம்பிர தாயமான ஒன்றையொன்று தாக்கி, யார் துரோகி என பட்டியலிடும் நடவடிக்கைகள் மூலமோ முடியாத காரியமாகின்றது. அதோடு எதிர் கட்சியின் ஆட்சியில் இருக்கும் ஒரு உள்ளூராட்சி அமைப்பான மாநகர சபையில் கூட தனது அதிகார பலத்தின் மூலம் சபையின் அதிகாரங்களைப் பறிக்கும் ஓர் அரசு எதிர்க்கட்சியோடு சினேக பூர்வமாக பேசி இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வருமா? என்பதை நோர்வேயின் மத்தியஸ்தம் கூட தடம்புரண்ட நிலையில் நிற்கும் இவ்வேளையில் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். ஓர் முழுமையான அரசியல் சிந்தனை மாற்றம் எம் நாட்டில் ஏற்படாத வரை சகலரும் ஏற்கும் தீர்வுத்திட்டம் ஏற்பட்டு

# கருத்தரங்கு

## இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

# அமைதியான நிதானமா? பரபரப்பான வேகமா?

''நாய்க்கு வேலை இல்லை நிற்க நேரமுமில்லை'' என்று ஒரு பழமொழி உண்டு, பரபரப்பாக இருந்துதான் காரியங்களை சாதிக்கலாம் என்பது சாத்தியமானதா? பரபரப்பும் அவசரமும் உள்ளத்தில் ஊசலாடும் அச்சங்கள் அமைதியாக நிதானித்து இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும். தடைகள் ஏற்படும் என்ற எண்ணம் உண்டானால் உறுதிதளர்ந்து விடும். அமைதியான நிதானமே தெளிவைத்தரும். எதனையும் ஓய்வாக செய்தவர்களே சாதனையாளர்களாகலாம் என்பது வரலாற்று தலைவர்களது தளராத கருத்து. எந்தவொரு திட்டமிடலினையும் பரபரப்புக்கும், அச்சத்துக்கும் மத்தியில் மேற்கொண்டு வெற்றிகள் கிடைக்குமானால், அவ் வெற்றி அந்த நேரத்து அதிர்ஷ்டமே அன்றி அறிவின் திட்டமிட்டதன் பேறு அல்ல,

பரபரப்பும் வேகமும் எவரையும் இலக்கு நோக்கி விரைவுபடுத்துவதல்ல விரைவுக்கு தேவை வேகம். வேகத்துக்கு தேவை விவேகத்துடனான நிதானம். ஆதலால் வெறுமனே வேகம் மட்டும் இருந்தால் நோக்கின் திசை கூட மாறி விடும்.

**கண்ணன்**

உதாரணமாக 2ம் உலக மகாயுத்தத்தின் போது முக்கியமான முனையில் நேச நாடுகள் சார்ந்த களமுனை தலைமைத்துவம் ''பிரிட்டிஷ் பிரதமர்'' ஒருவருக்கே வழங்கப்பட்டது. அத்தருணத்தில் களமுனைத்தளபதிகளை அழைத்து பிரதமர் கூறிய கூற்று'' ''நிதானமாக அவசரப்படுங்கள்'' என்பதே,ஆதலினால் முந்திக்கொண்டார்கள். வெற்றி கண்டார்கள்.

இன்று நாம் நம் சுதந்திரத்தை சட்டைப்பைக்குள் வைத்து நம்மை நாம் மறந்தாலும் மறக்காது எடுத்துச் செல்ல வேண்டிய நிலையாகிவிட்டது.

இந்த நிலையில் எமது உரிமைப்போராட்டத்தின் பரிணாமம், அதன் வளர்ச்சிப்போக்கு, நம் நிலை என்பன பற்றியும் திருப்பு முனையாக சிந்திக்க மீண்டும் சமாதானம் தோன்ற மக்கள் இறைவனை வேண்டுவதை விட வேறு வழி? இதனை அன்று தந்தை செல்வா தமிழரை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என கூறிச் சென்றுள்ளார்.

வேண்டியது இன்றியமையாத தொன்றே, இக்காலகட்டத்தில் நாமும் நிதானமாக அவசரப்பட வேண்டிய நேரம் வந்துள்ளது. அது இந்நேரமே. சர்வதேச நாடுகள் கூட கொழும்பையே ஆதரித்தன பராமரித்தன. இருந்தும் இன்று அந்நாடுகளில் பல கொழும்பை அவதானிக்கத்தொடங்கி விட்டன. இன்று இலங்கை அரசியல் ஆட்சிப் அதிகார கைப்பற்றலை தக்கவைப்பதிலே அன்றி ஆக்கபூர்வமான முடிவுகளை தீர்மானிப்பதில் இல்லை.

ஜனாதிபதி சமாதானம் பற்றி பேசினால், பிரதமர் போர் என்றால் போரே தான் என்று முரசறைகின்றார். பிறகு எப்படி சமாதானம் சாத்தியமாவது. உரிமைகள் சமமாக்கப்படுவது? குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளது காலாண்டுக்கும் மேலான போராட்டத்தில் தன்னிச்சையான யுத்த நிறுத்த காலத்தைக்கூட தங்களுக்கே ஏற்றபடி அமைத்துக்கொண்டது இலங்கை அரசு. யுத்த நிறுத்த முடிவின் கால எல்லை முடியும் விடிவின் முன்னே முந்திக் கொண்டவர்கள். ஆனால் நிதானிக்க பிந்திக்கொண்டார்கள். இலக்கு வைத்தார்கள். குறைந்தபட்சமாக ஆனையிறவுக்கு, ஆனால் பரபரப்பான இலக்கு, வேகம் காட்டிய இலக்கு ஆதலால் பரபரப்பான வேகம், பதட்டமான அவசரத்துக்கு வழி வகுத்தது. இதுவே விடுதலைப் புலிகளை நிதானமாக அவசரப்படுத்தியது.

காரணம் அவர்களது மனம் நான்கு மாத காலத்துக்குள் அமைதியின் நோக்குக்காக நிதானிக்க வைத்திருந்ததே, அதுவே அவர்கள் காத்திருந்து முனையவும், முடித்து வைக்கவும் முனைப்பாக அமைந்திருந்தது.

இந்நிலையில் நாம் ஒவ்வொருவரும் நிதானமாக சிந்தித்து எமக்கென்ற உணர்வினால் உரிமைக்காக ஒன்றுபட்டுச் செயல்பட முனைவோம். இதையும் உணராது தலைபோகும் ஆபத்துப்போல் எப்போதும் தங்கள் சுயதேவைச் சுயநோக்கு சேகரிப்பில் செயற்டுவார்களானால் சிலர், அவர்களது நாளைய வாழ்வின் நாட்களில் வேதனைகளையே தெரிந்து கொள்வார்கள். உணர்வுகளினால் உரிமையினை காக்கும் நேரம் இந்நேரமே, ஆதலினால் அமைதியாக நிதானித்து நாமும் அவசரப்படுவோம்.

## விளையாட்டுச் செய்திகள்

# விளையாட்டுத்துறை இன, மத, மொழி, பேதங்களைக் கடந்தது

**மருதூர் ஏ.மஜீத்**

(சாய்ந்தமருது நிருபர் எம்.காசீம் எம்.றபீக்)

இன, மத, மொழி, பிரதேசவாதங்களுக்கு அப்பால் இருந்து சிந்தித்து செயல்பட வேண்டிய ஓர் துறையாக விளையாட்டுத்துறை இருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். அத்துறை சார்ந்த தகவல்களையெல்லாம் ஒன்று திரட்டி மற்றவர்களும் பயன்பெறும் வகையில் நூல் ஒன்று. வெளிவந்திருப்பது மகிழ்வையும், நிறைவையும் தருகின்றது.

அந்த வகையில் இந் நூலை வெளிக்கொணர்ந்திருக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை பணிப்பாளர் நூறாணியா ஹஸன் மற்றவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக திகழ்கின்றார்.

இவ்வாறு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் மருதூர் ஏ.மஜீத் கூறினார்.

கல்முனை கலை, இலக்கிய, கலாசார பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நூறாணியா ஹஸனின் "எனது பார்வை" என்ற விளையாட்டு விமர்சன நூலுக்கான அறிமுக விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி கருத்தரங்கு மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (10.06.2001) கலாபூசணம் யூ.எல்.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து பேசிய மஜீத் கூறியதாவது:-

எமது நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் நூல் ஒன்றை வெளியிடுகின்றபோது படுகின்ற அவதியும், அவஸ்த்தையும் சொல்லமுடியாத துயரங்களாகும். இந்த அவல நிலையிலிருந்து எழுத்தாளர்களை விடுவிக்கின்ற ஒரு பொதுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வார்களேயானால், அது எழுத்தாளர்களுக்கு மிகுந்த பயனையும், நன்மையையும் தரக் கூடியதாகும். இதற்கான முயற்சிகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் நூறாணியா ஹஸன், கணக்காளர் எம்.காசீம், ஹொலி பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எம்..ஜெஸ்மீன், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஹிபத்தல் கரிம், ஆசிரியை சுல்பீகா சரீப், ஏ.ஆர்.எம்.ஜிப்ரி உட்படப் பலரும் கலந்துகொண்டு சிறப்பினத்தனர்.

# கல்லூரிகளுக்கிடையிலான வினாவிடைப்போட்டி முடிவுகள்

**வினாவிடைப்போட்டியில் வெற்றி பெற்ற புனித மிக்கேல் கல்லூரி, வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை, சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்கள் முறையே 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்று வெற்றிக் கேடயங்களுடன் காணப்படுவதைப் படங்களில் காண்க**





(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வினாவிடைப்போட்டிகள் மில்லஸ் லிமிட்டட் அனுசரணையுடன் ``கதிர்கள்'' அமைப்பினால் அண்மையில் நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு மஹாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் மாவட்டப் பாடசாலைகள் பல கலந்து கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டிகளில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி 1ம் இடத்தையும், வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசால்ல 2ம் இடத்தையும், மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்போட்டிகளில் ஆரம்ப வைபவத்திற்கு கிழக்குப் பல்கலைகக்கழக விரிவுரையாளர் பாலசுகுமாரும், சிறப்பு விருந்தினராக மட்டு.மஹாஜனக் கல்லூரியின் அதிபரும், மில்லஸ் லிமிட்டட் அதிகாரி லங்கா ரோகனவும் கலந்து கொண்டனர்.









**அண்மையில் மருதமுனை பெஸ்ட் இளைஞர் கழகத்தால் நடாத்தப்பட்ட வருடாந்த பாராட்டு விழாவில் கழக அமைப்பாளரும், பத்திரிகையாளரும் கல்முனை கல்வி வலய அலுவலருமான நழீம் எம்.பதுார்தீனின் சேவையினைப் பாராட்டுமுகமாக விழாவின் பிரதம அதிதி பாராளுமன்ற உறுப்பினர் மருதூர்கனி, பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் அஷ்ரப் பவுண்டேசன் தவி சாளர் உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.இப்றா ஹிம், கல்முனை இளைஞர் சேவை அதிகாரி எம்.ரீ.எம். ஹாறுான், வர்த்தகர் எச்.எம்.சித்தீக் ஆகியோர் அருகில் நிற்பதை 1ஆவது படத்திலும் பிரதம அதிதி உரை யாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளின் ஒரு பகுதியினரை 2ஆம், 3ஆம் படங்களிலும் காணலாம்.**

(படமும் தகவலும்:-கல்முனை மத்திய நிருபர் ஜெஸ்மி)

## வாசகர் நெஞ்சம்

### அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படும் 'பெரிய நீலாவணை'

கல்முனைப் பிரதேசத்திற்கு உட்பட்ட பெரிய நீலாவணை கிராமம் எல்லா வளங்களும் நிறைந்து கண்கொள்ளாக் காட்சி தரும் கிராமமாக விளங்குகின்றது. ஆனால் சில வருடங்களாக இக் கிராமம் எந்தவித அபிவிருத்தியும் காணப்படாதது கவலையைத் தருகின்றது. பல கிராமங்கள் தொடர்ந்து அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டு பாடசாலை தரம் உயர்த்தப்படல், வைத்தியசாலை தரம் உயர்த்தல் போன்றன நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஆனால் இந்த பெரிய நீலாவணை கிராமத்தைப் புறக்கணித்து பாரபட்சம் காட்டுவதுதான் புரியாத புதிராகவே உள்ளது.

தேர்தல் காலத்தில் வாக்குக் கேட்டுக்கொண்டு வந்த வேட்பாளர்கள், வீதி அமைத்துத் தருவோம். பாடசாலை, வைத்தியசாலை போன்றவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வோம். இக்கிராமத்திற்கு மின்சாரம் அற்ற பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து தருவோம் எனக்கூறி வெற்றி பெற்றதும், எங்கு ஓடி மறைந்தார்களோ தெரியாது.

இக்கிராமத்திலுள்ள சில வீதிகளில் மின் கம்பங்களோ, மின் குமிழ்களோ கிடையாது. இப்பகுதி இருண்ட பகுதியாக காணப்படுகின்றது. முக்கியமாக கரையோரப் பகுதியில் வாழும் மீனவ குடும்பங்கள் இந்த மின்சார வசதியின்மையால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். குறிப்பாக இப்பகுதியில் காற்று பலமாக வீசுவதால் கைவிளக்கு கொண்டு படிக்கும் மாணவர்கள் படிக்க முடியாத நிலை. இதில் இவர்களது கல்வி அறிவு பின்னடைந்துள்ளதை காணக்கூடியதாய் உள்ளது. அத்துடன் இரவு நேரங்களில் மீனவர்களின் வலைகள் களவாடப்படுகின்றது. இதனால் மீனவ குடும்பங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். அத்துடன் இக்கிராமத்தில் வைத்தியசாலை அமைக்கப்பட்டிருந்தும் ஒழுங்கான மருந்து வகைகளோ கிடையாது. இதனால் மக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வேறு வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலை! இவ்வளவு காலமும் மத்திய மருந்தகமும், மகப்பேற்று மருத்துவமனையாகவும் இயங்கிவந்த வைத்தியசாலையை மத்திய மருந்தகமாக மட்டும் தரம் குறைப்பதாக மக்கள் மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன. இத் தரம் குறைப்பின் மூலமாக மக்கள் ஆழ்ந்த விரக்தி அடைந்துள்ளனர். இவ்வளவு காலமும் இயங்கிய வைத்தியசாலையை தரம் குறைப்பதன் மூலம் மக்களுக்கு மிகவும் கஷ்ட நிலையே உருவாகும். அத்துடன் தயவு செய்து இவ் வைத்தியசாலையை தரம் குறைப்பதை எவருமே விரும்பவில்லை என்பது திண்ணம். மேலும் பாடசாலைகளது குறைகளையும் நிவர்த்தி செய்து சகல அபிவிருத்திப் பணிகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா?

**எட்வட் நிஸாந்தன்**
**பெரிய நீலாவணையூர்**

### வவுனியா பொது நூலகத்தின் அவல நிலை!

வவுனியா பொது நூல் நிலையத்தில் அலுவலக ஊழியர்கள் வாராந்த மலர்கள், மாதாந்த மலர்கள், சஞ்சிகைகள் வாசித்த பின்பே வாசகர் பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர காலத்தில் கிடைக்கப்பெறும் சஞ்சிகைகள் பல நாட்களின் பின்பே வாசகரைச் சேர்வதால் பல விடயங்களை வாசகர்கள் பிந்தியே அறிந்து கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கான வாசகர்கள் வந்து பயன்பெறும் இப் பொதுநூலகத்தில் இப்படியான அசௌகரியங்களை உரியவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இது இவ்வாறிருக்க நூலகத்திற்கு வரும் இளம் மாணவிகளிடம் இளம் மாணவர்கள் சேட்டை செய்து பின்னால் திரிகின்றார்கள். இதனால் நூலக அமைதி சீர்குலைவது கவலை தருகின்றது.

அத்தோடு புத்தகங்களை படிப்பவர்கள் தங்களுக்குத் தேவையான சில பக்கங்களை பிளேட் கொண்டு வெட்டிச் செல்லும் அசிங்கங்களை வாசகர்கள் செய்வதால், ஏனையவர்கள் அந்தப் பகுதியை வாசித்து பயன்பெற முடியாதுள்ளது.

**மயூரவதனன்**

### இயங்காமல் இருக்கும் மணிக்கூடு

வவுனியா நகரினை அழகு செய்யும், வவுனியா நகர சூழலில் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் மணிக்கூடுகள் பல நாட்களாக இயங்காமல் உள்ளது.

இந்த மணிக்கூட்டினைப் பராமரிப்போர் கவனத்தில் தென்படவில்லையோ, அசட்டையீனமோ தெரியவில்லை.

இந்த நிலை தொடராமல் மிக விரைவில் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுத்தால் பொது மக்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

**ச.மயூரவதனன்**

# மருதானை சந்தியில் தமிழ் பெண் மீது பாலியல் வல்லுறவு

## இரு பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)

**கொழும்பு மருதானை சந்தியில் வைத்து தமிழ்ப் பெண் ஒருவர் ஞாயிறு அதிகாலை பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.**

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் இரு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விசாரணை குட்படுத்தப்பட்டதாகவும் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

பதுளை, பசறை, கீன்கல தோட்டத்தைச் சேர்ந்த 28 வயதுடைய விதவைப்பெண்மணி மருதானை சந்தியில் சென்றல் தியேட்டருக்கு அருகில் உள்ள சோதனைச்சாவடிக்குள் வைத்து பொலிசாரினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக புகார் தெரிவித்துள்ளார். மேற்படி பெண்மணி தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பெண்மணி வேலை செய்யும் உணவு விடுதிக்குச் சென்ற இளைஞர் ஒருவர் இவரை தனது அறைக்கு அழைத்துச் சென்றதாகவும் அச்சமயமே இச்சம்பவம் நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றது. அந்த இளைஞர் யார் என்ற தகவல் எதுவும் வெளியாகவில்லை. இது தொடர்பாக பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞரைத் தாக்கிய படையினர்!

(நமது நிருபர்)

முறக்கொட்டான்சேனையில் இளைஞர் ஒருவரைப் படையினர் பலவந்தமாக அடித்து துன்புறுத்தியுள்ளனர் என்றும், நேற்றுக் காலை 10 மணியளவில் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த முறக்கொட்டான் சேனையைச் சேர்ந்த செல்லையா பாஸ்கரன் என்ற இளைஞரை முறக் கொட்டான்சேனை இராணுவ முகாமில் வழிமறித்த படையினர் சிகரெட் வாங்கி வருமாறு பணித்தனர் என்றும் கூறப்படுகின்றது.

அந்த இளைஞர் தான் அவசரமாகச் செல்வதால் சிகரட் வாங்க நேரமில்லை ஐயா எனக்கூறினார் என்றும் அப்போது படையினர் தடியாலும், கையாலும் அடித்து துன்புறுத்தி விட்டு, கட்டாயம் நாங்கள் சொன்ன வேலையைச் செய் என்று வற்புறுத்தினர் என்றும் அடியை வாங்கிய அந்த இளைஞர் படையினரின் கட்டளையை மதித்து கடையில் சென்று குறிப்பிட்ட "சிகரெட்"டுக்களை வாங்கிக் கொடுத்துவிட்டே வீடு சென்றுள்ளார் என்று தெரியவருகின்றது.

## முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டும்

### -மௌலானா எம்.பி-

(ஏறாவூர் நிருபர்)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனையற்ற முறையில் ஆதரவளிக்க முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளியாக, செயற்பட்டு அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்ட போதிலும் அதனால் சமூகத்திற்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. எமது பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது போனது என்றும் அலிசாஹிர் மௌலானா குறிப்பிட்டார்.

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் நேற்று இடம்பெற்ற விஷேட வைபவமொன்றில் அவர் உரையாற்றினார். அதிபர் எம்.சி.எச்.முஹமட் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் உட்பட பலர் உரையாற்றினர்.

## நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெறும்

### -டிரான் பெர்னாண்டோ-

(நமது நிருபர்)

ஐக்கியதேசியக்கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிரான்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 88 பேர் கையொப்பம் இட்டுள்ளனர்.

அத்துடன் தமிழ் கட்சிகளைச் சேர்ந்த 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இவர்களுடன் ரவூப்ஹக்கீம் அணியும் ஆதரவு வழங்கினால் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

## கல்லூரி மாணவிகள் பற்றிய செய்தியில் உண்மையில்லை!

(க. ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பில் உள்ள தேசிய பாடசாலை மாணவிகள் கல்லடி கடற்கரையில் பியர் அருந்தியதாக உலவும் புரளிகளில் எவ்வித உண்மையும் இல்லை என நம்பகமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக வெளிவந்துள்ள புரளிகள் சிலரால் திட்டமிட்டு உலவவிடப்பட்ட கருத்தேயாகும். இதனால் குறித்த பாடசாலைக்கும், சம்பந்தப் பட்டவர்களாகக் கூறப்படும் மாணவிகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதோடு அந்த மாணவிகளின் குடும்பத்திற்கும், அம்மாணவிகளின் கல்விக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக கல்லடி இராணுவ முகாமைச் சேர்ந்த அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது குறிப்பிட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லைஎனவும் அதில் உண்மை எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மாநமாநகர ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றதை நேற்று முன்தினம் தான் கேள்வியுற்றதாகவும் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெறவில்லை. இது குறிப்பிட்ட பாடசாலையையும் மாணவிகளையும் அவமானப்படுத்தும் செயல் என்றார்.

## இயந்திரப்படகு....

பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அப்பகுதி மீனவர்கள் அன்றாட சாப்பாட்டுக்கே அவதியுறுவதாகவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பாளர் இராதுரைரெத்தினத்திடம் பிரதேச வாசிகள் முறையிட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிலால் பாதிக்கப்பட்டுள்ள நாநூறு தொழிலாளர்களுக்கும் தமது அமைப்பு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுப்பதோடு கடலட்டை, கலர் மீன் பிடிப்பதை தடை செய்யுமாறு கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகத்தின் முன்பாக மீன்பிடி சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தவுள்ளதாகவும், அவ்வூர்வலத்தின் போது அரச அதிபர், பிரதேச செயலாளர், மீன்பிடி பணிப்பாளர், இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கும் தடை செய்யுமாறு கோரும் அறிக்கைகளை கையளிக்கவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தளுவத்த...

இவரின் வருகையை ஒட்டி தியத்தலாவ இராணுவ முகாமில் விசேட இராணுவ அணிவகுப்பு ஒன்று ஏற்பாடாகியுள்ளது. வெளிநாடு சென்ற இவர் மீண்டும் பணிக்குத் திரும்பமாட்டார் என்றும் அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்படவிருக்கின்றார் என்றும் - கடந்த வாரங்களில் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## சித்திரவதை...

*எனவே, இந்த விடயங்களை இத்தினத்தில் நாம் மனதில் இருத்திக்கொள்வோம்.*

*ஒருவர் எத்தகைய அதிகாரமுடையவராக இருந்தாலும், எம்மீது சிறு வதை புரியவோ, எம்மை உடல், உளரீதியாகத் துன்புறுத்தவோ எவ்வித உரிமையும் அற்றவர்.*

*இதனை உணர்ந்து எத்தகைய சித்திரவதைக்கும் நாம் உட்பட முடியாது என்ற எமது உரிமையைத் துணிவுடன் பேணுவோம், நிலைநாட்டுவோம்.*

## ஜானக....................

உயிரிழந்தார் படையினர் ஐவர் காயமடைந்தனர். சிறு ரக ஆயுதங்கள் மற்றும் ஆர்.பி.ஜிக்கள் கொண்டு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்- படையினர் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு அந்தத் தாக்குதலை முறியடித்தனர் என்றும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

## பேரியல்.....

நேற்று முன்தினம் 24ம் திகதி வாழைச்சேனை மஸ்ஜிதுல் ஹைரோத் பள்ளிவாயலில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

## பிரமனாலங்குளமூடாக லொறிகள் பயணம்

### பாதை மூடியதான செய்திக்கு புலிகள் மறுப்பு!

(நமது நிருபர்)

பிரமனாலங்குளம் சோதனைச் சாவடியை விடுதலைப்புலிகள் மூடியிருப்பதாக வந்த செய்தியை புலிகள் மறுத்துள்ளனர். இந்தச் செய்தி வேண்டுமென்றே அரச தரப்பினரால் ஏற்படுத்திய வதந்தி எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று வன்னியில் இருந்து ஆறு லொறிகள் பிரமனாலங்குளச் சோதனைச் சாவடியூடாக வவுனியா வந்ததாகவும் வவுனியாவில் இருந்து 23 லொறிகள் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று பொது மக்கள் இச்சாவடி ஊடாக பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

(யாழ் நிருபர்)

கொடிகாமம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் கொடிகாமம் பொலீஸாரால் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 24 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலத்தின் வயிற்றுப்பகுதி மற்றும் மார்புப் பகுதி போன்றவை குண்டு வெடிப்பினால் சிதைந்த நிலையில் காணப்பட்டன. இச் சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டும், இனங்காணும் பொருட்டும் யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை 17, 18இல்

(நமது நிருபர்)

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கை யில்லாப் பிரேரணை மீதான விவாதம் அடுத்த மாதம் 17ஆம்; 18ஆம் திகதிகளில் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேரணை மீதான, வாக்கெடுப்பு அனேகமாக 18ஆம் திகதி இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பான முடிவை எடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்றை எதிர்வரும் 4ஆம் திகதி சபாநாயகர் நடத்தவுள்ளார். இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும்படி அவர் சகல கட்சிகளினதும் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள அழைப்பில் கேட்டுள்ளார்.

**கணினி விற்பனைக்கு**

**பல நவீன வசதிகளுடனான Pentiam II கணணி குறைந்த விலையில் விற்பனைக்குள்ளது.**

**Canan BIC 265 Colour Printer உட்பட Sub Boofer System போன்ற எல்லா வசதிகளும் கூடியது.**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
**எம்.சந்திரன்**
**(தினக்கதிர் காரியாலயம்)**

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.